பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 21 செவ்வாய்க்கிழமை 04.05.2021 கதிர் 48

## இணையத்தில் வெளியானது உயர்தரப் பரீட்சை பெறுபேறு

2020ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு நாடு முழுவதும் உள்ள 2 ஆயிரத்து 648 பரீட்சை நிலையங்களில் உயர்தரப் பரீட்சை 2

## பருத்தித்துறையில் அதிகாலையில் கஞ்சா கடத்தல் முயற்சி முறியடிப்பு

### மினிபஸ்ஸுடன் ஒருவர் சிக்கினார்





(ந.லோகதயாளன்)

பருத்தித்துறையில் 95 கிலோ கிராம் எடையுடைய கஞ்சா போதைப்பொருளை மினிபஸ் ஒன்றில் கடத்திச் செல்ல முற்பட்ட ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். 2

## நாட்டை முழுமையாக முடக்க வேண்டும் அரசு

### ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை



இலங்கையைக் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முழுமையாக முடக்க வேண்டும் என்று அரசிடம் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைக் 2

## ரிஷாத் பதியுதீன் சபைக்கு அழைத்து வரப்படவில்லை



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் நாடாளுமன்ற அமர்வுகளில் 2

## முழு நாடும் எந்நேரமும் முடக்கப்படலாம்

### அரசு அறிவிப்பு



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் தீவிரமடைந்துள்ளதால் பயணக் கட்டுப்பாடுகள் விதிப்பது அல்லது நாடு முழுவதும் ஊரடங்கை அமுல்படுத்துவது தொடர்பில் தீர்மானம் இன்று மாலை வேளையில் கூட எடுக்கப்படலாம்.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். 2

## மேலும் 218 பேர் கைது!



முகக்கவசம் அணியாமை உட்பட தனிமைப் படுத்தல்சட்டத்தை மீறிய 218 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், தனிமைப்படுத்தல் சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் இதுவரை, தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 7 ஆயிரத்து 75 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

## மயக்க மருந்து கொடுத்து தங்கச் சங்கிலி அபகரிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மே 04

யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஓட்டோவை வாடகைக்கு அமர்த்தியவர்கள் சாரதிக்கு மயக்க மருந்து கலந்த குளிர்பானத்தை வழங்கி சாரதியின் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

ஆனைக்கோட்டைப் பகுதியில் வாடகைக்கு அமர்த்திய ஓட்டோவில் ஒருவர் சாவகச்சேரிக்கு பயணித்துள்ளார். சாவகச்சேரி சந்தியில் ஒரு பைக்கேற் 2

## 82 கிராம சேவகர் பிரிவுகள் இதுவரை 'லொக்டவுண்'

நுவரெலியா உட்பட 5 மாவட்டங்களின் மேலும் 9 கிராம சேவகர் பிரிவுகள் இன்று காலை முதல் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

இதன்படி, நுவரெலியா மாவட்டத்தில் நோர்வூட் 2

## 86 இந்திய மீனவர்கள் 11 படகுகளுடன் கைது

### இலங்கைக் கடற்படை தெரிவிப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.04

இலங்கை கடற்பரப்பிற்குள் சட்டத்துக்குப் புறம்பாக நுழைந்த குற்றச்சாட்டில் 86 இந்தியர்கள் 2

## கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் தொடர்பான விவாதம் ஒத்திவைப்பு!



கொழும்பு துறைமுக நகர விசேட வர்த்தக ஆணைக்குழு சட்டமூலம் மீது நாடாளுமன்றத்தில் நாளை நடைபெறவிருந்த விவாதம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

மேற்படி சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு நாடாளுமன்றத்துக்குக் கிடைக்காததாலேயே விவாதம் பிற்போடப்பட்டுள்ளது. 2

## பரீட்சைகளை நடத்தும் மாதங்களில் மாற்றம்

### அமைச்சரவை அனுமதி

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை என்பவற்றை நடத்தும் காலத்தில் மாற்றத்தை ஏற்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஜி.சீ.ஈ. சாதாரண தரப் ரீட்சையை ஓகஸ்ட் மாதத்திலும், ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சையை டிசெம்பர் மாதத்திலும் நடத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் 2

## வீரவன்ஸவுடன் இணைந்து அரசுக்கு எதிராக சு.க. சதி!

### மைத்திரி முன் போட்டுடைத்தார் பஸில்





முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நாம் எப்போதும் உதவுகின்றோம். எனினும், இந்தக் கட்சியிலுள்ள சிலர் அமைச்சர் விமல் வீரவன்சவுடன் இணைந்து அரசுக்கு எதிரான சதியில் 2

## நீரில் மூழ்கி பெண்ணும் இரு சிறுவர்களும் சாவு!

திவுலப்பிட்டி, ஹல்பே - மனம்பெல்ல பிரதேசத்தில் பாதுகாப்பற்ற முறையில் காணப்பட்ட நீர் நிறைந்த குட்டையில் வீழ்ந்து பெண்ணும் இரு சிறுவர்களும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களுள் 42 வயதான தாயும், 10 வயதான அவரது மகனும் அடங்குகின்றனர்.

அத்துடன் உயிரிழந்த மற்றையவர் மேற்படி நபர்களின் வீட்டுக்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் வசித்து வந்த 9 வயதான சிறுமி எனவும் 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 86 இந்திய மீனவர்கள் ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனள என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

சட்டத்துக்குப் புறம்பான குடியேற்றவாசிகள் இலங்கை கடலுக்குள் நுழைவதைத் தடுப்பதற்காக பாக்கு நீரிணையில் கடற்படை நடத்திய சிறப்பு ரோந்தின் போது 86 சந்தேக நபர்களுடன் 11 இந்திய மீன்பிடிப் படகுகள் இன்று செவ்வாய்க்கிழமை தடுத்து நிறுத்தப்பட்டன.

இலங்கைக்கு குடியேற்றவாசிகள் கடல் வழியாக நுழைந்தால் அவர்கள் மூலம் நாட்டில் கொவிட் - 19 தொற்று நோய் பரவலாம் என அஞ்சப்படுகின்றது. அதைத் தடுப்பதற்காக வடமேற்கு மற்றும் வடக்குக் கடற்பரப்பில் கடற்படை 24 மணி நேர ரோந்துப் பணியை அதிகரித்து பாதுகாப்பை முடுக்கிவிட்டுள்ளது.

மன்னாருக்கு தெற்கே இந்த சிறப்பு ரோந்துப் பணியின் போது, இலங்கை கடலுக்குள் நுழைய முயன்றன எனச் சந்தேகிக்கப்படும் 11 இந்திய மீன்பிடிப் படகுகள் தடுக்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பில் இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் மற்றும் இந்திய கடலோர காவல்படைக்கு தகவல் அளிக்கப்பட்டு 11 இந்திய மீன்பிடிப் படகுகளையும் 86 நபர்களையும் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் இது விடயமாக இந்தியத் தரப்பால் உத்தியோகபூர்வத் தொடர்பாடல்கள் இதுவரை இலங்கைக் கடற்படையினருடன் ஏற்படுத்தப்படவில்லை எனத் தெரிகின்றது.

இன்று இரவு அல்லது நாளை இந்தியத் தூதரகத்துடனான ஊடாட்டத்தின் பின்னர் இவர்கள் விடிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பரீட்சைகளை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதேவேளை, அரச பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான காலத்தைக் குறைத்துக்கொள்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## வீரவன்ஸவுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டு வருகின்றனர்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டினார்.

மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக கடந்த வாரம் பஸில் ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் முக்கிய பேச்சு நடைபெற்றது. இதன் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் இந்தக் குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார் என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க, அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆகியோர் முன்னிலையில் இந்தக் குற்றச்சாட்டை பஸில் ராஜபக்ஷ முன்வைத்தார்.

இந்தப் பேச்சில் ஒரு மாகாண சபைத் தொகுதியில் கட்சி சார்பில் மூன்று வேட்பாளர்களை நிறுத்த வேண்டும் என்று பஸில் ராஜபக்ஷ முன்வைத்த யோசனையை சுதந்திரக் கட்சியினர் எதிர்த்ததை அடுத்தே அவர் மேற்படி குற்றச்சாட்டை சுமத்தினார்.

இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த சு.கவின் பொதுச்செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, தன் மீதே மேற்படி குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது எனவும், தான் அவ்வாறான சதி நடவடிக்கையில் ஈடுபடவில்லை எனவும் கூறினார் - என்றுள்ளது.

## நீரில் மூழ்கி ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளனர்.

கீரை பறிக்கச் சென்றபோது அவர்கள் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

## கொழும்பு துறை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று முற்பகல் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## மயக்க மருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளிர்பானத்தை அவர் சாரதிக்கு வழங்கியுள்ளார். அதன் பின்பு கைதடியூடாக கோப்பாய் வீதியில் பயணித்த சமயம் ஓட்டோச் சாரதி மயக்கமுற்றுள்ளார்.

அவரின் கழுத்தில் இருந்த 2தங்கப் பவுண்சங்கிலியைஅபகரித்துக்கொண்டு ஓட்டோவை வாடகைக்கு அமர்த்தியவர் தப்பிச் சென்றுள்ளார். இதனால் வீதியோரம் இருந்த சாரதியை அந்த வீதி வழியாக பயணித்தவர்கள் மது போதையில் வீழ்ந்து கிடக்கிறார் என்று முதலில் எண்ணியமையால் தாமதித்தே அவரை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

சாரதி தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## முழு நாடும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தகவல் திணைக்களத்தில் இன்று பகல் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகள் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பில் அந்தந்த பிரதேசங்களின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தீர்மானம் எடுக்கப்படும்.

எதிர்வரும் நிலைமையைக் கருத்தில் கொண்டு பயணக் கட்டுப்பாடுகள் அல்லது நாடு முழுவதும் ஊரடங்கை அமுல்படுத்துவது தொடர்பில் தீர்மானம் இன்று மாலைவேளையில்கூட எடுக்கப்படலாம். இருப்பினும், தற்போது காணப்படும் நிலையில் ஊரடங்கு அவசியமற்றது.

எனினும், ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள் அரசு வந்துள்ளது - என்றார்.

## 82 கிராம சேவகர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் பிரிவில், இன்ஜஸ்றி கிராம சேவகர் பிரிவும், ஹற்றன் பொலிஸ் பிரிவில் போடைஸ் தோட்டம் கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் எல்தெனிய தேவாலய வீதி மற்றும் ரணவிரு தர்மசிறி மாவத்தை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும், இரத்தினபுரி மாவட்டத்தில், கங்குல்விட்டி, பொத்துபிட்டி வடக்கு, கலவான ஹப்புகொட கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், கொழும்பு மாவட்டத்தில் வில்லோர தோட்டம் கிராம சேவகர் பிரிவும், களுத்துறை மாவட்டத்தில் போம்புவல கிராம சேவகர் பிரிவும் இன்று காலை முதல் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கடந்த 21 ஆம் திகதி முதல் இன்று வரை 82 கிராம சேவகர் பிரிவுகளும், 6 இற்கும் மேற்பட்ட பொலிஸ் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

## நாட்டை முழுமை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்த அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மருத்துவமனைகளுக்குத் தேவையான அளவு அவசர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் பி.சி.ஆர். இயந்திரங்களை அரசு வழங்க வேண்டும்.

சரியான தருணத்தில் சரியான முடிவு எடுப்பதே முக்கியமானதாகும்.

அரசு கொரோனாவின் மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது. சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் சுகாதார வழிகாட்டல்களை வழங்கத் சுகாதாரத் தரப்பினர் தவறிவிட்டனர் - என்றார்.

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை சுப்பர்மடம் மயானத்துக்கு முன்பாக இந்த கைது நடவடிக்கை இன்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மயானத்துக்கு முன்பாக மினிபஸ் ஒன்றில் கஞ்சாப் பொதிகளை ஏற்ற முற்பட்டபோது, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்தனர். மற்றொரு நபர் தப்பியோடியுள்ளார்.

45 பொதிகளில் 95 கஞ்சா போதைப் பொருள் சந்தேகநபரிடம் கைப்பற்றப்பட்டது. கடத்தலுக்குப் பயன்படுத்திய மினி பஸ்ஸும் மீட்கப்பட்டுள்ளது என்றும் பருத்தித்துறை பொலிஸார் மேலும் கூறினர்.

## ரிஷாத் பதியுதீன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்ள சபாநாயகர் ஒப்புக்கொண்ட போதிலும், அவர் நாடாளுமன்றத்துக்கு இன்று அழைத்துவரப்படவில்லை என்று எதிர்க் கட்சி பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல குற்றஞ்சாட்டினார்.

கொரோனா அவசரகால நிலைமை தொடர்பான முழுநாள் விவாதம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று சபையில் ஆரம்பமாகியது.

இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து அதிகாலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்திருந்ததோடு, அவரை 90 நாள்களுக்குத் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதியைப் பெற்றிருந்தனர்.

இதனிடையே, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதங்களுக்கு அமைய, சபை அமர்வுகளில் ரிஷாத் பதியுதீன் கலந்துகொள்வதற்கான அனுமதி கோரப்பட்டிருந்த நிலையில், அதற்கான அனுமதியும் சபாநாயகர் வழங்கியிருந்தார்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நடைபெறும் சபை அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கலந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும், அவரை அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில், அமர்வின்போது எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை ஏன் நாடாளுமன்ற அமர்வுக்கு அழைத்து வரவில்லை என்று சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

ரிஷாத் பதியுதீனை நாடாளுமன்றத்துக்கு அழைத்து வருவதற்கு சபாநாயகரின் கையொப்பம் தேவைப்படுகின்றது எனச் சம்பந்தப்பட்ட பிரிவுகள் தெரியப்படுத்தியுள்ள நிலையில், உடனடியாக குறித்த கையொப்பத்தையிட்டு அவரை சபைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கும்படி சபாநாயகரிடம் லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. கேட்டுக்கொண்டார்.

அத்துடன், இது தொடர்பாக சபாநாயகரைத் தான் குறை கூறமாட்டேன் என்றும், கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் வைத்து ரிஷாத் பதியுதீனை நாடாளுமன்றத்துக்கு அழைத்து வர யோசிக்காமல் இரண்டு தடவைகள் சபாநாயகர் ஒப்புக்கொண்டார் என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கூறினார். எது எவ்வாறாயினும், இந்த விவகாரம் குறித்து ஆராய்வேன் என்று சபாநாயகர் தெரிவித்தார்.

## இணையத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது.

பரீட்சைக்கு 3 லட்சத்து 62 ஆயிரத்து 824 பேர் தோற்றியிருந்த நிலையில், பரீட்சை பெறுபேறுகள் இன்று இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் விஞ்ஞானப் பிரிவில் மீசாலை வீரசிங்கம் மாணவி கனகேஸ்வரன் கவீனா முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

முன்னாள் யாழ். மாவட்ட மேலதிக செயலாளரும் தற்போதைய முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலாளருமான கனகேஸ்வரனின் புதல்வியான கவீனாவே மாவட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளார்.

இவ்வாறு 3ஏ தரச் சித்தியை பெற்று மாவட்டத்தில் முதலிடம் பிடித்தவர் தேசிய ரீதியில் 17ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

மேலும் பரீட்சைப் பெறுபேறுகளை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத் தளத்தின் ஊடாக பெறுபேறுகளை அறிந்துகொள்ள முடியும் எனவும் பரீட்சை திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

தேவை
கைதடியில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு 077 272 9651

கடை வாடகைக்கு தேவை
யாழ்ப்பாணம் K.K.S .வீதியில் யாழ். இந்து கல்லூரி தொடக்கம் மருதனார் மடம் வரையான எல்லைக்குள் கடை ஒன்று வாடகைக்கு உடன் தேவை.
தொடர்புகளுக்கு - 0774135036

மஞ்சள் கன்று விற்பனைக்கு
1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 021 492 7778

A/L கணக்கீடு
அன்றும்.. இன்றும்.. என்றென்றும்...
உங்கள் கணக்கீட்டு ஆசிரியர்
Mr.K. BALAKAJEN
B.Com (Jaf), H.N.Dip-in-Acc (ATI), Dip-in-Edu (OUSL), M.Com (Hons) Acc.Spl

| கந்தர்மடச் சந்தி யாழ்ப்பாணம் | சுவாமியார் வீதி கொழும்புத்துறை |
| --- | --- |
| சனி, ஞாயிறு 6.00 - 8.00 a.m | சனி, ஞாயிறு 2.00 - 7.00 p.m |
| வியாழன் 5.00 - 8.00 p.m | புதன் 6.00 - 9.00 p.m |
| ZOOM Classes (வெளி மாணவர்களுக்கானது) | திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி 730 - 10.15 p.m |

Theory + Paper + Mcq + Model exam
0772168884

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புதுடில்லியின் இயலுமை

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின்பண்டார நாட்டின் நிலைமை தொடர்பில் ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

"மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா 1977 இல் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தி இந்தியாவைக் கோபப்படுத்தியமையால் முப்பது ஆண்டு கால யுத்தத்திற்கு நாம் முகம் கொடுக்க நேர்ந்தது. சீனாவுடன் தேவைக்கதிகமான தொடர்புகளைப் பேணுவதன் மூலம் தற்போதைய அரசாங்கமும் இந்தியாவைக் கோபப்படுத்தும் வகையிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அரசாங்கத்தின் இந்தச் செயற்பாட்டின் காரணமாக நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு சர்வதேசத்தின் மத்தியில் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது."

– இவ்வாறு பிரதான எதிரணியின் பேச்சாளர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இன்றைய கால கட்டத்தில் கூர்ந்து நோக்கற்பட வேண்டிய ஒரு கருத்து இது.

1997 பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, அதன் மூலம் நாட்டின் அரசமைப்பையே மாற்றினார். நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையைக் கொண்டு வந்து தமக்குத் தாமே அதிகார முடியை வலிமையாகச் சூடிக் கொண்டார்.

அந்த அதிகார வலுவும், சர்வதேசத்தில் அவருக்கு கிட்டிய பிற தரப்புகளின் ஆதரவும் புதுடில்லியை உதாசீனப்படுத்தி கணக்கெடுக்காமல் நடந்து கொள்ளும் மிதப்பை அவருக்குத் தந்தன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் திறந்த பொருளாதாரக் கொள்கைகளினால் புதுடில்லி கொழும்பு மீது சீற்றமுற்றது என்று நளின் பண்டார கூறுவது அர்த்தமற்றது. அவ்விடயமும் கொழும்பு மீது அச்சமயத்தில் இந்திய அரசு நெருடல் கொள்வதற்கு ஒரு காரணமாக இருந்திருக்குமே தவிர, அது பிரதான காரணமாக அமைந்திருக்கவில்லை என்பதே உண்மை.

அப்போதிருந்த சர்வதேச உறவுப் பின்னலில் இலங்கை எடுத்த பக்கச் சார்பு தனது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைப்பாட்டுக்கு ஆபத்தானது என்று கருதிய புதுடில்லி, அதன் காரணமாக கொழும்பைத் தன் வழிக்குக் கொண்டு வர வைக்கும் தந்திரோபாய மார்க்கத்தைக் கையாண்டது.

கொழும்புக்குத் தலையிடி கொடுத்து, அதனைத் தன் காலில் வந்து விழ வைக்கும் உபாயத்துக்கு அப்போது தமிழர்கள் மத்தியில் புத்துயிர்ப்புப் பெற்றிருந்த உரிமைப் போராட்டத்தை வசமாகப் பயன்படுத்த முயன்றது பாரதம்.

சர்வதேச விவகாரங்களைக் கையாள்வதில் தனித்துவமும் துணிச்சலும் மிக்க தலைவராக விளங்கிய இந்திராகாந்தி அம்மையார் இந்த விடயத்தில் தைரியமாக முடிவெடுத்துக் காய் நகர்த்தினார்.

ஈழத் தமிழர் போராளிகளுக்கு தமிழகத்தில் தஞ்சம் அளித்தார். அவர்களுக்கு மறைமுகமாக ஆயுதப் பயிற்சிகளும் பிற உதவிகளும் வழங்கி கொழும்புக்கு எதிரான அழுத்தங்களைத் தீவிரப்படுத்தினார்.

துரதிஷ்டவசமாகப் பிரதமர் இந்திரா காந்தி அவரது பாதுகாவலர்களினாலேயே கொல்லப்பட நிலைமை தலைகீழானது.

இந்தியப் பயிற்சியைப் பெற்று வளர்ந்த தமிழ்ப் போராளிகள் – குறிப்பாக புலிகள் – சுயாதீனமாகச் சிந்திக்கத் தலைப்பட்டனர். தங்கள் தலையெழுத்தை தாங்களே எழுத அவர்கள் விரும்பினர். இந்தியாவின் ஏவல் சக்திகளாக மட்டும் செயற்பட அவர்கள் தயாராக இருக்கவில்லை. சுதந்திரமாகத் தமது வலிமையை வளர்த்துக் கொண்டு பேரியக்கமாக அவர்கள் விஸ்வரூபம் எடுத்தனர்.

தமிழ்ப் போராளிகளின் வலிமையையும் செயற்பாட்டையும் காட்டி இலங்கை விடயத்துக்குள் நுழைந்த புதுடில்லியினால், அப்போதைய நிலையில் ஜே.ஆர்.அரசை வழிக்குக் கொண்டு வரப் பண்ணி, இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை ஏற்படுத்தச் செய்ய முடிந்தது. ஆனால் அதனை சொல்லிலும் செயலிலும் நடைமுறைப்படுத்தச் செய்யும் வலிமை பின்னர் வந்த இந்திய அரசுகளிடம் இருக்கவேயில்லை. கையாலாகாத புதுடில்லி ஆட்சிப் பீடத்தினால் இலங்கையில் நடந்தேறுபவற்றைப் பார்த்திருக்கவும், கண்டனம் தெரிவிக்கவும் மட்டுமே முடிந்தது. முடிகின்றது. அதுதான் இன்றைய நிலைமையும் கூட.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா போல தன்னுடைய வெளியுறவுக் கொள்கைகள், செயற்பாடுகள் மூலம் – குறிப்பாக சீனாவின் செல்லப் பிள்ளையாகத் தன்னை அப்பட்டமாக வெளிப்படுத்துவதன் மூலம் – கோட்டாபய அரசும் புதுடில்லியை சீற்றத்துக்கு உள்ளாக்குகின்றது என்பது உண்மைதான்.

ஆனாலும், எண்பதுகளின் நிலைமை அல்ல இன்றைய இருபதுகளின் சூழல்.

இந்திரா காந்தி போல வலிமையான, துணிச்சலான முடிவுகளை எடுக்கும் அரசியல் தலைமையும் சூழலும் இன்று புதுடில்லியில் இல்லை. ஜே.ஆர். காலம் போல களத்தில் தூண்டி தலையீடு, செய்வதற்கு வலிமையாகப் பயன்படுத்தக் கூடிய தமிழர் தரப்போ, பிற பிரிவுகளோ இலங்கையில் இல்லை. இலங்கையில் இருந்த புலிகள் அமைப்பை முற்றாக நாசம் செய்யத் துணை போன புதுடில்லி அதன் பலன் குறித்து இப்போது கவலையுடன் சிந்திக்கும் நிலைதான் உண்டு.

மிக வலிமையான நிலையில் கோட்டாபய. பின்புலத்தில் மிகப் பலத்துடன் சீனா.

பாரதம் எந்தப் பெரிய தேசமாக இருந்தாலும், இலங்கை எவ்வளவு சிறிய நாடாக இருந்தாலும், எண்பதுகளில் இருந்த நிலைமை மலையேறி விட்டது.

இப்போது மரத்தில் அணில் ஏற விட்ட நாய்தான் புதுடில்லி. கொழும்பை பார்த்து கீழிருந்து குரைக்க மட்டுமே அதனால் முடியும். அவ்வளவுதான் சாத்தியம்.

# தமிழர்களின் இதய பூமியை மகாவலி அபகரிக்க முயற்சி

**தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் இளைஞர் அணித் தலைவர் சபா குகதாஸ்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி எல் வலயத்தின் மூலம் கபளீகரம் செய்ய முயற்சிக்கும் மத்திய அரசாங்கத்தின் முயற்சிக்கு வடக்கு மாகாண ஆளுநர் நிர்வாகம் உடன்படக் கூடாது அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் இளைஞர் அணித் தலைவருமான சபா குகதாஸ்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த பிரதேசங்களை சிங்கள குடியேற்றங்களுக்கு உட்படுத்தி தமிழர் தாயகக் கோட்பாட்டை உடைக்கும் பேரினவாத அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலைத் தடுத்து நிறுத்த தொடர்ந்து தமிழ் மக்கள் போராடி வரும் நிலையில் வடக்கு கிழக்கு இணைப்பை நிலத் தொடர்பு ரீதியாக இல்லாது ஒழிக்கும் இந்த மகாவலி எல் வலயம் திட்டமிட்ட ஓர் இனவழிப்பு என்பதை தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டம் தமிழர்களின் இதய பூமி அதனை அபகரிக்கும் பாரிய திட்டம் முதற்கட்டமாக மணலாறு பிரதேசம் – வெலிஓயா என்ற பெயர்மாற்று சிங்கள குடியேற்றத்துடன் ஆரம்பமாகி தென்னமரவடி, கொக்குளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி, செம்மலை தண்ணீர் ஊற்று எனப் பெரும் நிலப் பிரதேசங்களை உள்ளடக்கி 16 அதிகமான கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை கொண்ட ஒரு சிங்கள பிரதேச செயலகப் பிரிவை குறிவைத்து நகர்த்தப்படுகின்றது. இப்பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் 1984 ஆண்டின் பின்னர் யுத்தத்தால் இடம்பெயர ஆரம்பித்து 2010 வரை அகதிகளாக அவலங்களை அனுபவித்து மிகுந்த வறுமையில் தற்போது குடியேறி வாழும் போது போதிய உதவிகள் இன்றி துன்பப்படுகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் 75 ஆயிரம் இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பு இல்லாமல் பெரும் துயரங்களை அனுபவிக்கின்றனர். அவர்களுக்கான சுய தொழில் முயற்சிக்கு காணிகள் வழங்குவதன் மூலம் தொழில் வாய்ப்புப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கலாம் அத்துடன் தற்சார்புப் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம். இதற்கு வடக்கு மாகாண ஆளுநர் நிர்வாகம் அரசாங்கத்திடம் திட்டங்களை முன் மொழிந்து இளைய தலைமுறையின் நல்வாழ்விற்கு உதவி புரிய வேண்டும். ஏற்கனவே சுய தொழில் முயற்சியாளர்களுக்கு காணி வழங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டு விண்ணப்பித்தோர் எதிர்பார்த்து காத்திருக்கும் போது அவர்களுக்கான தீர்வையாவது இதன் ஊடாகத் தீர்க்க நடவடிக்கை எடுங்கள்.

வடக்கு மாகாண ஆளுநர் நிர்வாகம் நியாயமற்ற குடியேற்ற திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்காது தமிழர்களின் இருப்பை பாதுகாக்க நீதியாக நடந்து கொள்ள வேண்டும்.

– என்றுள்ளது.

# பொகவந்தலாவையில் மண் சரிவு லயன் அறைகள் ஆபத்தில் உள்ளன



பொகவந்தலாவை, லட்சுமி தோட்ட கீழ்ப்பிரிவில் கோவில் அருகில் உள்ள குடியிருப்பின் முன்பகுதியில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

113 இலக்க லயன் அறைகள் உள்ள பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சிறிய கற்பாறைகள் சரிந்துள்ளதுடன் மண் திட்டும் சரிந்துள்ளதாகவும், இதனால் லயன் அறைகள் அபாய நிலையில் இருக்கின்றன எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

பலத்த மழை பெய்துவரும் நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகத் தோட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் லட்சுமி தோட்ட கீழ்ப் பிரிவு தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இலங்கையர்கள் அமெரிக்க டொலர்களில் ஹோட்டல்களுக்கு கொடுப்பனவு செய்யலாம்

இலங்கைச் சுற்றுலா மேம்பாட்டு ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களுக்கு, இலங்கையர்கள் அமெரிக்க டொலர்களில் கட்டணம் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியுறவு பரிவர்த்தனை சட்டத்தின் கீழ் நிதி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

இலங்கையர்களின் வசம் உள்ள வெளிநாட்டு நாணயங்களை வங்கி முறைக்கு உள்ளீர்க்கும் முயற்சியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வழங்கப்படும் சேவைகளுக்கு இலங்கையில் வசிக்கும் நபர்களிடமிருந்து டொலர்களில் கட்டணம் செலுத்துவதை ஹோட்டல்களுக்கு அனுமதிப்பதன் மூலம் வர்த்தமானி ஒரு விதிவிலக்கு அளிக்கிறது.

முன்னதாக, ஹோட்டல்களுக்கு வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களிடமிருந்து மட்டுமே டொலர் கொடுப்பனவுகளை ஏற்க அனுமதிக்கப்பட்டது,

தற்போது இலங்கையர்கள் அமெரிக்க டொலர்களில் கட்டணம் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு - பம்பலப்பிட்டி பகுதியில் பெண்கள் உள்ளிட்ட 25 பேர் கைது

தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளை மீறி, கொழும்பு பம்பலப்பிட்டி – மிலாகிரியப் பகுதியில் இரவுநேர கேளிக்கைவிடுதி ஒன்றில் விருந்து வைத்த 25 பேரை புறக்கோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட இரவுநேர கேளிக்கைவிடுதியில் விருந்துக்குத் தயாராகி வந்த குழுவினர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது விருந்தில் கலந்து கொண்ட 07 பெண்கள் உட்பட 25 பேர் கைது செய்யப்பட்டனர். தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறினர் என அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட கொவிட் 19 இன் புதிய வழிகாட்டுதலின் கீழ், P ரடி, பார், கசினோ, இரவு நேரக் களியாட்ட விடுதிகள் மறு அறிவித்தல் வரைக்கும் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில், தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளை மீறி குறித்த விருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# தடுப்பூசித் தட்டுப்பாடு இன்னும் மூன்று மாதங்கள் நீடிக்கும்! சீரம் நிறுவன நிறைவேற்று அதிகாரி வெளியிட்ட தகவல்

'கொரோனா தடுப்பூசித் தட்டுப்பாடு மேலும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு நீடிக்கும்'என சீரம் நிறுவன நிறைவேற்று அதிகாரியான அடர் பூனவல்லா கூறி உள்ளார். மேலும், இந்திய மத்திய அரசு புதிதாக எந்த தடுப்பூசிக் கோரிக்கையையும் தமக்குத் தரவில்லை என வெளியான தகவலையும் அவர் மறுத்துள்ளார்.

இந்தியாவில் தற்போது கொவிஷீல்ட், கொவெக்சின் ஆகிய இரண்டு கொரோனா தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளன. இதில் கொவிஷீல்ட் மருந்தை புனேயில் உள்ள சீரம் நிறுவனமும், கொவேக்சினை ஹைதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனமும் உற்பத்தி செய்கின்றன. முன்களப் பணியாளர்கள், முதியவர்கள், 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே தடுப்பூசி போடப்பட்டு வந்த நிலையில், கடந்த மே முதலாம் திகதி முதல் நாடு முழுவதும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள மத்திய அரசு அனுமதி வழங்கியது. ஆனால், தற்போதைய நிலையில் தடுப்பூசிக்கு தட்டுப்பாடு நிலவுவதால் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடும் பணியை 11 மாநிலங்கள் மட்டுமே தொடங்கியுள்ளன.



இந்நிலையில், சீரம் நிறுவன நிறைவேற்று அதிகாரியான அடர் பூனவல்லா இங்கிலாந்தில் 'ஃபினான்சியல் டெய்லி' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், "தற்போது மாதத்திற்கு 6 – 7 கோடி டோஸ் உற்பத்தி செய்யப்படுகிறது. ஜூலைக்குப் பிறகுதான் 10 கோடி டோஸ் உற்பத்தியாக அதிகரிக்கப்படவுள்ளது. எனவே இன்னும் 2 – 3 மாதத்திற்கு தடுப்பூசிக்கான தட்டுப்பாடு நீடிக்கும். இந்தியாவில் கொரோனா இரண்டாவது அலை இவ்வளவு சீக்கிரத்தில் தாக்கும் என அதிகாரிகள் யாரும் எதிர்பார்க்கவில்லை.

மேலும், ஆண்டுக்கு 100 கோடி தடுப்பூசி உற்பத்தி செய்ய வேண்டிய நிலை வரும் என நாங்களும் நினைக்கவில்லை. மத்திய அரசிடம் இருந்து புதிதாக கோரிக்கைகள் எதுவும் கிடைக்கப் பெறாததால் தடுப்பூசி உற்பத்தி உடனடியாக விரைவுபடுத்தப்படவில்லை" என்று கூறியிருந்தார். ஏற்கனவே, இந்தியாவில் தடுப்பூசி வழங்கக் கோரி சக்தி வாய்ந்த நபர்களிடமிருந்து பல்வேறு மிரட்டல்கள் வந்ததைத் தொடர்ந்து பூனவல்லா தனது குடும்பத்துடன் இங்கிலாந்து சென்று தங்கியுள்ளார். தற்போது தடுப்பூசி தட்டுப்பாடு நிலவும் நிலையில் மத்திய அரசு புதிதாக எந்த கோரிக்கையையும் தரவில்லை என அவர் கூறியது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதற்கு மத்திய அரசு தரப்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

"கடந்த முறை கொடுக்கப்பட்ட 10 கோடி டோஸ்களுக்கான கோரிக்கையில், தற்போது வரை 8.744 கோடி டோஸ் கொவிஷீல்ட் தடுப்பூசிகளை சீரம் நிறுவனம் வழங்கி உள்ளது. இப்படிப்பட்ட நிலையில், மே, ஜூன், ஜூலை மாதங்களில், 11 கோடி தடுப்பூசி டோஸ்கள் வழங்க சீரம் இந்தியா நிறுவனத்துக்கு 100 சதவீத முன்பணமாக 1732.5 கோடி கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி வழங்கப்பட்டது. அதை அந்நிறுவனம் அன்றே பெற்றுக்கொண்டது. இதேபோல, 5 கோடி கொவேக்சின் தடுப்பூசி டோஸ்களுக்கும் முன்பணம் தரப்பட்டுள்ளது. ஆகையால், தடுப்பூசிகளுக்கு புதிதாக கோரிக்கைப் பத்திரம் கொடுக்கவில்லை என கூறுவது தவறானது என மத்திய அரசுத் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதையடுத்து தனது டுவிட்டரில் பூனல்லா, "நான் கூறிய தகவல் தவறாக வெளிவந்துள்ளது. தற்போது வரை நாங்கள் 26 கோடிக்கும் அதிகமான டோஸ்களுக்கான கோரிக்கைகளைப் பெற்றுள்ளோம். அதில் 15 கோடி டோஸ் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 11 கோடி டோஸ் விரைவில் தரப்படும். உற்பத்தியை ஒரே நாளில் அதிகரித்து விட முடியாது. குறைவான மக்கள் தொகை கொண்ட நாடுகளே தடுப்பூசியை உற்பத்தி செய்வதில் திணறும் நிலையில், இந்தியா போன்ற அதிக மக்கள் தொகை கொண்ட நாட்டில் தேவையான தடுப்பூசியை வழங்குவது சாதாரண வேலையல்ல. அனைவருக்கும் விரைவில் தடுப்பூசி கிடைக்க வேண்டுமென்பதே எங்களின் விருப்பம். அதற்காக நாங்களும் கடினமாக உழைக்கிறோம்" எனக் கூறியுள்ளார்.

இந்தியாவில் இதுவரை 15 கோடியே 71 லட்சத்து 98 ஆயிரத்து 207 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இது மொத்த மக்கள் தொகையில் 12 சதவீதமாகும். 12 கோடியே 83 லட்சத்து 74 ஆயிரத்து 277 பேருக்கு முதல் டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இரண்டு கோடியே 88 லட்சத்து 23 ஆயிரத்து 930 பேர் இரண்டு டோஸ் தடுப்பூசியும் போட்டுள்ளனர்.

## சென்னை அம்மா உணவகத்தின் மீது தாக்குதல்; தி.மு.கவினர் இருவர் மீது சட்ட நடவடிக்கை!



சென்னை மதுரவாயல் பகுதியில் உள்ள அம்மா உணவகத்தில் இருந்த பெயர்ப் பலகைகளை தி.மு.கவைச் சேர்ந்த இருவர் சேதப்படுத்தியுள்ளார் என குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர் பான காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டன. இதையடுத்து, பல்வேறு தரப்பினரும் இந்த விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வந்தனர்.

இந்தநிலையில், மதுரவாயல் பகுதியில் அம்மா உணவகத்தின் பெயர்ப் பலகையை நீக்கிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தி.மு.கவைச் சேர்ந்த இருவரைக் கட்சியில் இருந்து நீக்கம் செய்து தி.மு.க. தலைவரும் முதலமைச்சராகப் பதவியேற்கவுள்ளவருமான மு.க ஸ்டாலின் நடவடிக்கை எடுத்துள்ளார். மேலும், உணவகத்தின் பெயர்ப் பலகையை மீண்டும் அதே இடத்தில் பொருத்தவும், குறித்த இருவர் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கவும் அவர் அறிவுறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழகத் தேர்தலில் 59 ஆண்டுகளுக்குப் பின்னர் பொன்னேரி தொகுதியைக் கைப்பற்றியது காங்கிரஸ்



தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது. அதிலும் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, திருத்தணி, மாதவரம், செங்குன்றம், திருவொற்றியூர், ஆவடி, பூந்தமல்லி, மதுரவாயல் உள்ளிட்ட10 சட்டமன்ற தொகுதிகளையும் தி.மு.க. கூட்டணி கைப்பற்றியது.

முக்கியமாக பழம்பெரும் தொகுதியான பொன்னேரி தொகுதியில் 1962 ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த டி.பி.ஏழுமலை வெற்றி பெற்றார். இதனைத்தொடர்ந்து 1967 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை நடந்த தேர்தல்களில் அ.தி.மு.க. ஏழு முறையும், அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு முறையும், தி.மு.க. நான்கு முறையும் வெற்றி பெற்றிருந்தன. அதன் பின்னர் கடந்த 59 ஆண்டுகளாக இந்தத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி வெற்றியை பெறமுடியாதிருந்து வந்தது.

இந்த நிலையில், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியிலிருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் துரை சந்திரசேகர் போட்டியிட்டார். இவர் தன்னை எதிர்த்து அ.தி.மு.க. சார்பில் மூன்றாவது முறையாகப் போட்டியிட்ட பி.பலராமனைவிட 9,389 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றியடைந்துள்ளார். இதனால் 59 ஆண்டுகளுக்குப் பின்னர் பொன்னேரி தனி தொகுதியில் காங்கிரஸ் கட்சி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றுள்ளது.

## கொரோனா பரவலைத் தடுக்க முழு ஊரடங்கு ஒன்றே தீர்வு

### டுவிட்டர் பதிவில் ராகுல் காந்தி

'கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க முழு ஊரடங்கு ஒன்றே தீர்வு!' என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார் .

இந்தியாவில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை பாதிப்பு அதிகமாக உள்ளது. நாட்டில் இதுவரை கொரோனா பாதித்தவர்கள் எண்ணிக்கை இரண்டு கோடியைத் தாண்டியுள்ளது. தொற்று பரவலைக் கட்டுப்படுத்த பல்வேறு மாநிலங்களில் பகுதியளவு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், தொற்றுப் பரவல் குறையாமல் உள்ளது. பொருளாதாரம் பாதிக்கப்படும் என்பதால் நாடு தழுவிய முழு ஊரடங்கை அமுல்படுத்த யோசித்து வரும் மத்திய அரசு, பாதிக்கப்படும் பகுதிகளில் மட்டும் கடுமையான ஊரடங்கை அமுல்படுத்துமாறு மாநில அரசுகளை அறிவுறுத்தியுள்ளது.



இந்தநிலையில், கொரோனாப் பரவலைத் தடுக்க நாடு தழுவிய முழு ஊரடங்கு ஒன்றே தீர்வு என காங்கிரஸ் முன்னாள் தலைவரும் வயநாடு தொகுதி எம்.பியுமான ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

'பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் பாதிக்கப்படாத அம்சத்துடன் கூடிய ஊரடங்கு மட்டுமே கொரோனா பரவலைத் தடுப்பதற்கான ஒரே வழி. மத்திய அரசு நடவடிக்கை எடுக்காததால் கொரோனாவால் மக்கள் பலர் உயிரிழந்து வருகின்றனர்' என தனது டுவிட்டர் பதிவில் ராகுல் காந்தி கூறியிருக்கிறார்.

## லண்டனிலிருந்து 450 ஒக்சிஜன் சிலிண்டர்கள் விமானம் மூலம் தமிழகம் வந்தடைந்தன



இந்தியாவில் கொரோனா வைரஸின் இரண்டாம் அலை தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. கொரோனாவால் பாதிக்கப்படுபவர்கள் மற்றும் இறப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், மருத்துவமனைகளில் சிகிச்சைக்கான படுக்கைகள் மற்றும் ஒக்சிஜன் விநியோகத்தின் மீது மிகக் கடுமையான அழுத்தம் ஏற்பட்டிருக்கிறது.

இதனைத்தொடர்ந்து இந்தியாவில் ஏற்பட்டுள்ள இரண்டாவது அலை கொரோனாத் தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளில் உதவிட பல்வேறு நாடுகள் முன் வந்துள்ளன. அந்த வகையில், லண்டனில் இருந்து இந்திய விமானப்படை சிறப்பு விமானம் மூலம் 46.6 லீற்றர் திறன் கொண்ட 450 ஒக்சிஜன் சிலிண்டர்கள் இன்று அதிகாலை தமிழகம் வந்தடைந்தன.

முன்னதாக குவைத்திலிருந்து 282 சிலிண்டர்கள், 60 ஒக்சிஜன் செறிவூட்டிகள், வென்டிலேட்டர்கள் மற்றும் பிற மருத்துவப் பொருள்களைக் கொண்டு வந்த விமானம் ஒன்றும் இன்று காலை இந்தியா வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## பீகாரில் 15 ஆம் திகதிவரை முழு ஊரடங்கு நீடிப்பு

பீகாரில் வரும் 15 ஆம் திகதி வரை முழு ஊரடங்கு நீடிக்கப்படுகின்றது என முதலமைச்சர் நிதிஷ்குமார் அறிவித்துள்ளார். கொரோனாத் தொற்று பரவல் அதிகரித்துக்கொண்டே வரும் நிலையில் ஊரடங்கு நீடிப்பு குறித்த அவரது அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஊரடங்கு நாள்களில் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள் பற்றி நெருக்கடி மேலாண்மைக் குழு விரைவில் அறிவிக்கும் என அவரது அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகாரில் கடந்த 24 மணி நேரத்தில் 11,407 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனாப் பாதிப்பால் நேற்று 82 பேர் உயிரிழந்தனர்.

பீகாரில் கொரோனா பாதித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5.09 லட்சமாக உயர்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் கடலில் மூழ்கி படகு விபத்து; 4 பேர் பலி

தென் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த அகதிகள் மெக்சிகோ வழியாக அமெரிக்காவுக்குள் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

இவர்களில் ஒரு பிரிவினர் ஆள்கடத்தல் கும்பலிடம் பணத்தைக் கொடுத்து தரை வழியாகவும், கடல் வழியாகவும் சட்ட விரோதமாக எல்லையைக் கடந்து அமெரிக்காவுக்குள் நுழைகின்றனர்.

அந்த வகையில் ஆள்கடத்தல் கும்பல் ஒன்று அகதிகளை படகில் ஏற்றிக்கொண்டு மெக்சிகோ வழியாக அமெரிக்காவுக்குள் நுழைந்தது.

நேற்று முன்தினம் இந்த படகு சாண்டியாகோ நகருக்கு அருகே கடலில் சென்று கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக அங்கிருந்த ஒரு பாறையின் மீது மோதியது. இதில் படகு உடைந்து சுக்கு நூறாக நொறுங்கியது.



படகில் இருந்த அனைவரும் நீரில் மூழ்கித் தத்தளித்தனர்.

இதுகுறித்து உடனடியாக மீட்புக் குழுவினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் விரைந்து சென்று மீட்புக் குழுவினர் தீவிர மீட்புப் பணியில் ஈடுபட்டனர். ஆனால் அதற்குள் 4 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்களின் உடல்களை மீட்புக் குழுவினர் மீட்டனர்.

அதேசமயம் நீரில் தத்தளித்துக்கொண்டிருந்த 23 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே ஆள் கடத்தலில் ஈடுபட்ட குற்றத்துக்காக படகின் கப்டனை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



## இங்கிலாந்து கடற்படையில் ஜெட் பேக் எனும் புதிய பிரிவு

இங்கிலாந்து கடற்படையினருக்கு உதவி செய்வதற்காக "ஜெட் பேக்" என்ற புதிய பிரிவு பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது. ஆங்கிலக் கால்வாயில் சென்ற போர்க் கப்பலில் இருந்து சில வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு "ஜெட் பேக்" அணிந்து பறந்து காட்டினர். மணிக்கு 130 கிலோ மீட்டர் வேகத்தில் காற்றைக் கிழித்துக் கொண்டு சென்ற அவர்கள் போர்க்கப்பலில் அனாயசமாக இறங்கி சாதனை செய்தனர்.

காற்றை அதிவேகமாக உள்ளிழுத்து பறக்கும் இந்த "ஜெட் பேக்" மூலம் கடத்தல், தீவிரவாத செயல்கள் போன்றவை எளிதில் முறியடிக்க முடியும் என திட்டமிடப்பட்டுள்ளது.

## பில் கேட்ஸ் மற்றும் மெலிண்டா கேட்ஸ்

# விவாகரத்து செய்ய முடிவு

அமெரிக்காவின் பிரபல மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் பில்கேட்ஸ் அந்நிறுவனத்தின் நிறுவனர்களில் ஒருவர் இவரது மனைவி மெலிண்டா கேட்ஸ்.

கடந்த 1975ம் ஆண்டு பால் ஆலன் உடன் இணைந்து மைக்ரோசாப்ட் நிறுவனம் தொடங்கிய காலத்தில் அதன் தலைமைச் செயல் அதிகாரியாக பில்கேட்ஸ் செயல்பட்டார். அதன்பின், அதன் தலைவர் மற்றும் தலைமை மென்பொருள் வடிவமைப்பாளர் ஆகிய பதவிகளிலும் இருந்துள்ளார். அந்நிறுவனத்தில் மேலாளராகப் பணிபுரிந்த மெலிண்டா கேட்சை சந்தித்து பில்கேட்ஸ் பின்னர் ஹவாயில் வைத்து திருமணம் செய்து கொண்டார்.

அதன்பின் 6 ஆண்டுகள் கழித்து, கடந்த 2000ம் ஆண்டு பில்கேட்ஸ் மற்றும் அவரது மனைவி மெலிண்டா கேட்ஸ் பெயரில் அறக்கட்டளை தொடங்கப்பட்டது. இதனூடாக கல்வி, பாலின சமத்துவம் மற்றும் சுகாதார நலம் போன்ற இலாப நோக்கற்ற சமூக பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



இந்நிலையில், இந்த தம்பதி 27 ஆண்டுகளுக்குப் பின் விவாகரத்து செய்ய முடிவு எடுத்துள்ளனர். இதுதொடர்பாக பில்கேட்ஸ் தம்பதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கடந்த 27 ஆண்டுகளில் 3 குழந்தைகளை வளர்த்துள்ளோம். உலகம் முழுவதும் பரந்து செயல்படும் அறக்கட்டளை ஒன்றையும் நிறுவி, அதனால் அனைத்துத் தரப்பு மக்களும் சுகாதாரமுடன் வாழ்வதற்கான வழிகள் செய்து வரப்பட்டுள்ளன.

இந்த பணியில் இணைந்து தொடர இருக்கிறோம். எனினும், எங்களது திருமண வாழ்வை முடித்துக் கொள்ள நாங்கள் முடிவு செய்துள்ளோம். எங்களுடைய வாழ்வின் அடுத்த கட்டத்தில் ஒன்றாக இணைந்து, தம்பதியாக வளர்ச்சி அடைவதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என தெரிவித்துள்ளனர்.

## கடந்த 24 மணி நேரத்தில்

## ஆப்கானில், தாலிபான் பயங்கரவாதிகள் 141 தாக்குதல்களை நடத்தியதாக தகவல்



ஆப்கானிஸ்தானில், கடந்த 24 மணி நேரத்தில், தாலிபான் பயங்கரவாதிகள் 141 தாக்குதல்களை நடத்தியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

முன்னாள் அமெரிக்க அதிபர் டிரம்ப் ஆப்கானில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படைகளை மே முதலாம் திகதியுடன் விலகுவதாக உறுதியளித்திருந்த நிலையில், தற்போதைய அதிபர் ஜோ பைடன் அதனை செப்டம்பர் பதினொராம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இதனால் ஆத்திரம் அடைந்த தாலிபான்கள் பாதுகாப்புப் படைகளுக்குச் சொந்தமான பல்வேறு முகாம்கள் மீது நூற்றுக்கும் மேற்பட்ட தாக்குதல்களை நிகழ்த்தினர். பாதுகாப்புப் படைகள் நடத்திய எதிர் தாக்குதலில் தாலிபான் தளபதி உள்பட நூற்றுக்கணக்கான பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக ஆப்கான் அரசு தெரிவித்துள்ளது.

## 6 மணி நேரத்தில் 1,400 கி.மீ தூரம் பயணித்து

# விபத்தில் துண்டான சிறுவனின் கையை வெற்றிகரமாக ஒட்டவைத்த மருத்துவர்கள்

சீனாவில் துண்டான 7 வயதுச் சிறுவனின் கையை மீண்டும் ஒட்ட வைக்க மருத்துவக் குழுவினர் ஆயிரத்து 400 கிலோ மீட்டர் தூர பயணத்தை வெறும் 6 மணி நேரத்தில் கடந்து சிகிச்சை மேற்கொண்ட சம்பவம் திகிலூட்டியது.

சின்ஜியாங் மாகாணத்தின் தென்மேற்குப் பகுதியான ஹோட்டனில் நடந்த ஒரு டிராக்டர் விபத்தில் 7 வயதுச் சிறுவனின் வலது கை துண்டானது. இதையடுத்து சிறுவனின் கையை மீண்டும் ஒட்டவைக்க போராடிய மருத்துவர்கள் ஹோட்டனில் இருந்து ஆயிரத்து 400 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்த நகர மருத்துவமனைக்கு சிறப்பு விமானம், டாக்ஸி, ஆம்புலன்ஸ் என தொடர் பயணம் மேற்கொண்டனர்.



6 மணிநேர போராட்டத்திற்கு பின் சிறுவனின் வலது கை வெற்றிகரமாக மீண்டும் ஒட்ட வைக்கப்பட்டது. இந்த வியத்தகு பணியை மேற்கொண்ட மருத்துவர்கள், விமான ஊழியர்கள், வாகன ஓட்டுநர்களை பொது மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

## தேம்ஸ் நதியில் படகு வீடுகளில் தீ விபத்து நூறு ஆண்டு பழமையான படகுகள் சிக்கின

இங்கிலாந்தில் பழமை வாய்ந்த இரு படகு வீடுகள் தீக்கிரையாயின. தலைநகர் லண்டனில் ஓடும் தேம்ஸ் நதியில் ஹாம்ப்டன் என்ற இடத்தினருகில் 1916ம் ஆண்டு கட்டப்பட்ட பழமை வாய்ந்த படகு வீடுகள் செயல்பட்டு வந்தன.

தேம்ஸ் நதியில் போக்குவரத்துக்கும், சுற்றுலாவுக்கும் இங்கிருந்து படகுகள் அனுப்பப்பட்டு வந்தன. இந்நிலையில் நேற்று மாலை படகு குழாமில் திடீரென கரும்புகையுடன் தீ விபத்து ஏற்பட்டது.

காற்றின் வேகம் மற்றும் குழாம் மற்றும் படகுகளில் இருந்த எரிபொருள் காரணமாகவும் தீ அடுத்து இருந்த படகு வீட்டுக்கும் பரவியது. இந்த தீ விபத்தில் இரு படகு வீடுகளும்,எள ஏராளமான படகு களும் எரிந்து நாசம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உலர் உணவு பொதி வழங்கல்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருவதன் காரணத்தால் முடக்கப்பட்ட லிங்கநகர், அன்புவழி புரம், பூம்புகார் பகுதிகளில் உள்ள விசேட தேவையுடையோர் (மாற்றுத்திறனாளிகள்) மற்றும் மேலும் இனங்காணப்பட்ட பொது மக்களுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிப்பொதுச் செயலாளர் கவிஞர் ஸ்ரீ. ஞானேஸ்வரன் தலைமையில் உலர் உணவுப் பொருள்கள் நேற்று மாலை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக தரமுயர்த்தலில் எனது முயற்சி தொடரும்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு

கல்முனை வடக்கு தமிழ் பிரதேசசெயலகம்தரமுயர்த்தப்படுவது தொடர்பாக அமைச்சர் சமல்ராஜபக்ஷவுடன் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் மீண்டும் பேச்சு நடத்தியுள்ளார்.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படவேண்டியதன் அவசியம் தொடர்பாக நேற்று திங்கட்கிழமை அமைச்சர் சமல்ராஜபக்ஸவுடன் மீண்டும் பேச்சொன்று கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டிய நியாயத்தை அமைச்சரிடம் எடுத்துக் கூறியுள்ளதுடன், தேவையான எழுத்துமூலம் ஆவணங்களையும் பின்தங்கிய கிராம அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் சமர்ப்பித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் சமர்ப்பித்த அனைத்து ஆவணங்களையும்பார்வையிட்ட அமைச்சர், இது குறித்து தான் கவனம் செலுத்துவதாகவும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனிடம் தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பின் பின்னர் இராஜாங்க அமைச்சர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தொடர்பாக நாம் நாடாளுமன்றத்தில் உள்ளேயும், வெளியேயும் பல முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டுவந்திருந்ததுடன், தொடர்ந்தும் அமைச்சர் சமல்ராஜபக்ஷ, மற்றும் முன்னாள் அமைச்சரும் ஸ்ரீ லங்கா பொதுஜனபெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளருமான பஷில் ராஜபக்ஷ மூலமும் முன்னெடுப்புக்களை தொடர்ந்த வண்ணமே இருக்கின்றோம். பல விமர்சனங்களையும், விசமத்தனங்களையும் தாண்டி, கல்முனை வாழ் தமிழ் மக்களின் நியாயமான நீதியான கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும்.



அதுநிச்சயமாகதற்போதைய அரசாங்கத்தினால் முடியும், பிரதமர் அவர்களின் வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு, கல்முனைவடக்குதமிழ் பிரதேச செயலக தரமுயர்த்தலில் எமது முயற்சி தொடருமெனவும் இதன் போது தெரிவித்திருந்தார்.

## கேரளா கஞ்சாவுடன் திருமலையில் இளைஞர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

ஒரு கிலோ 90 கிராம் கேரளா கஞ்சாவுடன் திருகோணமலையில் இளைஞரொருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கைது நேற்று மாலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் திருகோணமலை-வரோதய நகர் பகுதியைச் சேர்ந்த சேவியர் கிலின்டன் (23வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அனுராதபுரம் சந்தியிலிருந்து முச்சக்கர வண்டி ஒன்றில் கஞ்சாவினை கொட்டபே பகுதிக்கு விற்பனை செய்வதற்காக கொண்டு சென்று கொண்டிருந்தபோது சீனக்குடா பொலிஸ் இணையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அங்கு விரைந்த சீனக்குடா பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.ஜீ.எஸ். ரணவீர உட்பட அவரது குழுவினர் குறித்த முச்சக்கர வண்டியை சோதனையிட்ட போது அதிலிருந்து ஒரு கிலோ 90 கிராம் கேரளா கஞ்சாவைக் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணை செய்து வருவதாகவும் பின்னர் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கல்முனையில் கொரோனாத் தடுப்பு இறுக்கமாக அமுல்படுத்த ஏற்பாடு

## மீறுவோரைக் கைது செய்ய மாநகர கொவிட் தடுப்பு செயலணி தீர்மானம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மிக இறுக்கமாகவும் துரிதமாகவும் அமுல்படுத்துவதற்கு மாநகர கொவிட்-19 தடுப்புச் செயலணி தீர்மானித்துள்ளது.

கொரோனாக் கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கு ஒத்துழையாமல், பொது இடங்களில் சுகாதார நடைமுறைகளை அலட்சியம் செய்வோரைக் கைது செய்து, சட்ட நடவடிக்கை எடுப்பதெனவும் அச்செயலணி தீர்மானித்துள்ளது.

கல்முனை மாநகர கொவிட் - 19 தடுப்பு செயலணிக் கூட்டம் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தலைமையில் நேற்று மாலை, முதல்வர் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டில் கொரோனாத் தொற்று மூன்றாவது அலை தீவிரமாக உருவெடுத்து வருகின்ற சூழ்நிலையில் கல்முனை மாநகர பிரதேசங்களில் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து இதன்போது தீவிரமாக ஆராயப்பட்டது. தற்போது ரமழான் நோன்புப் பெருநாள் வியாபாரம்



களை கட்டியுள்ள நிலையில் புடைவைக் கடைகளில் சனநெரிசலைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலும் அங்கு சுகாதார நடைமுறைகளைக் கண்டிப்பாக அமுல்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கூடிய கவனம் செலுத்தப்பட்டது. அவ்வாறே பொதுச் சந்தைகள், கடைத் தெருக்களில் சமூக இடைவெளிகளைப் பேணச் செய்வதிலும் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட அனைத்து சுகாதார நடைமுறைகளையும் இறுக்கமாக அமுல்படுத்துவதெனவும் இதற்கு வர்த்தகர் சங்கங்கள் முழுமையாக ஒத்துழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் பள்ளிவாசல்களில் தொழுகைக்காக வருவோர் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கான ஒழுங்குகளை பள்ளிவாசல்களின் நிர்வாகிகள் கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. வெளி மாவட்டங்களுக்கான போக்குவரத்துகளை கட்டுப்படுத்தல், கண்காணித்தல், கொழும்பு போன்ற தூர இடங்களுக்கான பயணங்களில் ஈடுபடுகின்ற பஸ்களினதும் பயணிகளினதும் விவரங்களை அன்றாடம் சேகரிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

தேவையின்றி வீதிகளில் நடமாடுவோர், குறிப்பாக அங்கும் இங்குமாக கூடி நிற்கின்ற, வீதிகளில் சுற்றித்திரிகின்ற இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு கல்முனை மாநகர சபை எல்லையினுள் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாநகர சபை, சுகாதாரத்துறை, பொலிஸ், இராணுவம், பிரதேச செயலகங்கள், வர்த்தக சங்கங்கள், பள்ளிவாசல்கள் சம்மேளனம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் கூட்டுப்பொறுப்புடன் ஒன்றிணைந்து முன்னெடுப்பது எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

# ரிஷாத் விடுதலையில் ஐக்கிய மக்கள் சக்தி தீவிரமான கரிசனை காட்ட வேண்டும்

## முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

மக்கள் காங்கிரஸ் தலைவர் றிஷாத் பதியுதீனை விடுவிப்பதில் ஐக்கிய மக்கள் சக்தி தீவிர கரிசனை காட்ட வேண்டும் என மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் உள்ள அவரது இல்லத்தில் மக்கள் காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கட்சி முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் நேற்று மாலை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

ரிஷாத்தின் கைது இந்த நாட்டில் வாழ்கின்ற எமக்கு மட்டுமல்ல உலக முஸ்லிம் சமூகத்தினரையும் களங்கப்படுத்தியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கைது செய்வதாக இருந்தால் சபாநாயகர் நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் இப்படியாக புனித ரமழான் காலத்தில் நடுநிசியில் கைதாவது பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது அரசின் உயர்மட்டத்தில் இருக்கும் ஜனாதிபதி பிரதம மந்திரி, பாதுகாப்பு அமைச்சர் இந்த விடயத்தில் கவனம் எடுத்து விடுதலை செய்ய வேண்டும். குற்றங்கள் ஏதும் இருப்பின் நீதிமன்றத்துக்கு முன் நிறுத்துங்கள். பல முறை ஜனாதிபதி ஆணைக்குழு அவரையும் அவரது சகோதரரையும் விசாரணை செய்துள்ளது அவர்களினால் சாட்சியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எந்தவிதகுற்றமுமற்றவர் என்றிருந்த போது அநியாயக் கைது இடம் பெற்றுள்ளது.

சிறுபான்மை சமூகம் நிம்மதியாக வாழ வேண்டும். எமது சமூகம் ஒரு போதும் பயங்கரவாதத்துக்கு துணை போனதும் கிடையாது முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் என ரிஷாத் ஒரு நல்ல நேர்மையான மனிதன் என நற்சான்றும் வழங்கியுள்ளார்கள்.

முஸ்லிம் சமூகத்தை பழிவாங்க நினைக்க வேண்டாம் வீண் பழி சுமத்துவதை விட்டு அப்பட்டமான கைதுகளை நிறுத்துங்கள். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அதன் தலைவர் இனவாத கட்சியல்ல எல்லோருக்கும் பொதுவானதும் பொதுவான தலைவருமே இந்த கட்சி என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்திய வில்வித்தை வீரர் ஜெயந்த தலுக்தாருக்கு கொரோனாத் தொற்று

கொரோனா பாதித்த இந்திய வில் வித்தை வீரர் ஜெயந்த தலுக்தார் மருத்துவமனையில் ஐ.சி.யூ. பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவில் ஒரே நாளில் 3.68 லட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உள்ளனர் என மத்திய சுகாதார அமைச்சகம் நேற்றுக் காலை தெரிவித்தது. கடந்த சில நாள்களாக தொடர்ந்து உச்சம் தொட்டு வந்த கொரோனாப் பாதிப்பு நேற்று சற்றே குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்திய வில் வித்தை வீரர் ஜெயந்த தலுக்தார் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு அசாமின் கவுகாத்தி நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் ஐ.சி.யூ. பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இதனை இந்திய வில்வித்தை கூட்டமைப்பு அதிகாரி ஒருவரும் உறுதி செய்துள்ளார். அவர் நலமுடன் இருக்கிறார் என்றும் அதனால் விரைவில் குணமடைவார் என்று எதிர்பார்ப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.





# ஐ.பி.எல். 2021 தொடர் ஒத்திவைக்கப்பட்டது!

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வீரர்கள் வருண் சக்ரவர்த்தி, சந்தீப் வாரியர் இருவருக்கும் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதையடுத்து நேற்று நடக்கவிருந்த கொல்கத்தா, பெங்களுர் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் ரத்துச் செய்யப்பட்டது.

இந்த நிலையில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் பாலாஜிக்கும் அணியின் நிர்வாகி, வாகன பராமரிப்பாளர் ஆகியோருக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதையடுத்து ஒட்டுமொத்த சென்னை அணியும் தனிமைப்படுத்தப்பட்டது. அதே போன்று, கொல்கத்தா அணியோடு அண்மைய நாட்களில் போட்டிகளில் விளையாடிய அணிகளும் தனிமைப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இன்று வெளியாகியுள்ள தகவலின்படி ஐ.பி.எல் 2021 போட்டித் தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. இந்தத் தகவலை ஐ.பி.எல்.லின் நிர்வாகி ப்ரிஜேஸ் பட்டேல் இன்று மதியம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக ஐ.பி.எல் நிர்வாகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இந்த முடிவானது சகல தரப்பினரதும் ஏகோபித்த ஆதரவோடு எடுக்கப்பட்டுள்ளது. வீரர்கள், பயிற்சியாளர்கள், அணிக் குழுவினர், ஏற்பாட்டாளர்கள், ஊழியர்கள் என யாருடைய பாதுகாப்பையும் கேள்விக்குட்படுத்த இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை விரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல் தொடரோடு தொடர்புபட்ட அனைவரும் தங்களது குடும்பங்களோடு பாதுகாப்பாக சென்று சேர்வதை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உறுதிப்படுத்தும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொல்கத்தா, சென்னை அணிகளைத் தொடர்ந்து சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் ரித்திமன் சகாவுக்கும் கொரோனாத் தொற்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

# மாலைதீவுக்கு புறப்படத் தயாராகும் அவுஸ்திரேலிய வீரர்கள்

ஐ.பி.எல்.தொடரில் விளையாடிவந்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களும், அணிகளின் பயிற்றுவிப்பாளர்களாகவும் வர்ணனையாளர்களாகவும் பங்கெடுத்திருந்தவர்களும் மாலை தீவுக்குப் புறப்படத் தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

கொரோனாப் பரவல் அணிகளையும் ஊடுருவியிருப்பதால் இந்த வருட ஐ.பி.எல். தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து தொடரில் பங்கேற்றிருந்த வெளிநாட்டு வீரர்களும் ஏனையோரும் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்ப ஆயத்தமாகிவருகின்றனர். இந்தியாவில் கொரோனாத் தொற்று தீவிர நிலையிலிருப்பதால் பல நாடுகளும் இந்தியாவிலிருந்து தங்கள் நாடுகளுக்குள் விமானங்கள் வருவதை நிறுத்தியுள்ளன. அவுஸ்திரேலியாவோ, இந்தியாவிலிருந்து பயணிப்பவர்கள் யாரும் தங்கள் நாட்டுக்குள் வரக்கூடாது என்றும் மீறி நுழைபவர்கள் கண்டறியப்பட்டால் குடிவரவுச் சட்டங்களின் கீழ் தண்டனை வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறது.

இந்த நிலையில், சொந்த நாட்டுக்குத் திரும்பவியலாத அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களும், அணிகளின் பயிற்றுவிப்பாளர்களாகவும் வர்ணனையாளர்களாகவும் பங்கெடுத்திருந்தவர்களும் மாலை தீவுக்குச் சென்று தங்கியிருக்கத் தீர்மானித்திருப்பதாக தெரிவித்துள்ளனர். ஏறத்தாழ 40 பேரைக் கொண்ட இந்தக் குழுவினர், ஏற்கனவே அங்கே சென்று தங்கியுள்ள ஐ.பி.எல். வர்ணனையாளரும் முன்னாள் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரருமான ஸ்லேட்டரின் வழியைப் பின்பற்றவுள்ளதாக கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், தாங்கள் நாட்டிலிருந்து புறப்படும்போதே திரும்பி வரும்போது 14 நாள்கள் கட்டாயத் தனிமையிலிருக்கவேண்டும் என்பதை அறிந்திருந்ததாகவும் ஆனால், நாட்டுக்குள்ளேயே நுழைய முடியாத நிலை ஏற்படும் என்பதை கற்பனைகூடச் செய்து பார்த்திருக்க




வில்லை என்றும் பட் கம்மின்ஸ் தெரிவித்திருக்கிறார்.

இவர்களோடு இருக்கும் சக வீரரான டான் கிறிஸ்டியன், இங்கிலாந்தில் கழக மட்டப் போட்டிகளில் விளையாட ஒப்பந்தமாகியிருப்பதால் அவர் மட்டும் மாலை தீவுக்குச் செல்ல மாட்டார் என தெரியவந்திருக்கிறது. ஆயினும், இப்போதைய நிலையில் இந்தியாவிலிருந்து தங்கள் நாட்டுக்குத் திரும்பும் சொந்த நாட்டுப் பயணிகளை மட்டுமே இங்கிலாந்து ஏற்கிறதென்பதும் இடையில் டுபாயினூடாகச் செல்லும் நிலையும் இப்போது இல்லை என்பதும் அவரது முடிவில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் எனக் கூறப்படுகிறது.

# இந்திய மக்கள் குறித்த கரிசனம் எமது அரசுக்கும் இருக்க வேண்டும்!

## அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் ஸ்லேட்டர் காட்டம்!

இந்தியாவில் கொரோனா தொற்று பரவலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் ஐ.பி.எல். தொடரில் வர்ணனையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மைக்கேல் ஸ்லேட்டர், தொடரிலிருந்து விலகி மாலைதீவில் தங்கியுள்ளார்.

இந்தியாவிலிருந்து அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் விமானங்களுக்கு அவுஸ்திரேலிய அரசு கொரோனா அச்சம் காரணமாக தடை விதித்துள்ளது. அதனால் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்றுள்ள அவுஸ்திரேலிய வீரர்கள் தங்கள் நாட்டு அரசு தங்களுக்கு சிறப்பு விமானம் ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆனால், அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மொரிசன் அதனை முற்றிலுமாக மறுத்திருந்தார். அதனை மேற்கோள்காட்டி, பிரதமரின் முடிவை டுவிட்டர் தளத்தில் கடுமையாக விமர்சித்திருந்தார் மைக்கேல் ஸ்லேட்டர்.

ஸ்லேட்டரின் அந்த விமர்சனத்துக்கு டுவிட்டர் தளத்தில் எதிர்ப்பு கடுமையாக எழுந்தது. 'பணத்திற்கு ஆசைப்பட்டு உயிரைப் பணயம் வைத்துச் சென்றவர்கள் எல்லாம் இப்படிப் பேசக்கூடாது' என டுவிட்டர் பயனர்கள் சிலர் ஸ்லேட்டரைச் சீண்டியிருந்தனர் .

அதற்கு மைக்கேல் ஸ்லேட்டர் தற்போது பதில் கொடுத்துள்ளார். அரசாங்கம் மீதான அந்த விமர்சனத்தை நான்



உயிர் வாழ்வதற்காக முன்வைத்திருந்தேன். தொடக்கத்திலேயே ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகிவிட்டதால் ஒரு சதம் கூட நான் அங்கே சம்பாதிக்கவில்லை என்பதை பணத்திற்காக என நினைப்பவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னை வசை பாடுவதை நிறுத்திவிட்டு இந்தியாவில்ஒவ்வொருநாளும்உயிர்நீத்துக்கொண்டிருக்கும் மக்களைக் குறித்துச் சிந்தியுங்கள். அது தான் கரிசனம். அது எங்கள் அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும்! - என தன் மீதான விமர்சனங்களுக்கு பதில் அளித்துள்ளார் மைக்கேல் ஸ்லேட்டர்.

# மட்ரிட் ஓபின் டென்னிஸ் பெலின்டா, குவிட்டோவா வெற்றி!

ஸ்பெயினில் நடைபெறும் மட்ரிட் ஓபின் டென்னிஸ் தொடரின் மகளிர் பிரிவு 3 ஆவது சுற்றில் சுவிட்சர்லாந்தின் பெலின்டா பென்சிச், செக் குடியரசின் பெட்ரா குவிட்டோவா ஆகியோர் வெற்றி பெற்றனர்.

போட்டித் தரவரிசையில் 8 ஆம் இடத்திலிருக்கும் பென்சிச், டுனீசியாவின் அன்ஸ் ஸாபுயேருக்கு எதிரான ஆட்டத்தில் 7–6 (7/2), 4–3 என்ற செட்களில் முன்னிலையில் இருந்தபோது, ஸாபுயேர் போட்டியிலிருந்து விலகுவதாக தெரிவித்தார். இதையடுத்து பென்சிச் வென்றதாக அறிவிக்கப்பட்டார்.

மற்றொரு ஆட்டத்தில் ரஷ்யாவின் வெரோனிகா குடர்மெடொவாவை போட்டித்தரவரிசையில் 9 ஆவது இடத்திலிருக்கும் பெட்ரா குவிட்டோவா எதிர்கொண்டார். 2 மணி நேரம் நடைபெற்ற இந்த ஆட்டத்தின் முடிவில் குவிட்டோவா 6 – 3, 4 – 6, 6 – 4 என்ற செட்கணக்கில் வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை நாள்கள் குறைக்கப்படுவதாக தெரிவித்து பொகவந்தலாவ தோட்டத் தொழிலாளர் போராட்டம்





பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ தோட்டத் தொழிலாளர்கள் நேற்று (திங்கட்கிழமை) கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1,000 ரூபா கிடைத்ததில் இருந்து மேலதிக கொடுப்பனவு கிடைப்பதில்லை எனவும், வேலை நாள்கள் குறைக்கப்படுவதாகவும், தோட்ட அதிகாரிக்கு எதிர்ப்பு தெரிவித்துமே தொழிலாளர்கள் பொகவந்தலாவ ஹற்றன் பிரதான வீதியில் இருமருங்களிலும் நின்று இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கொரோனா வைரஸ் காரணமாக சமூக இடைவெளியோடு பதாதைகளை ஏந்தியவாறு இந்த போராட்டம் சுமார் ஒரு மணித்தியாலம் நடைபெற்றது.

இதன்போது போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில் -

தேநீருக்கு 5 நிமிடத்தை கூடுதலாக எடுத்தால் கூட கடுமையாக பேசுகின்றனர். காலையில் இருந்து இரவு வரை வேலை வாங்குவார்கள். எந்தப் பயனும் இல்லை. எனவே தோட்ட அதிகாரி வேண்டாம்.

கிழமையில் மூன்று நாள் வேலை தருவதாகச் சொல்லி இரண்டு நாளே வேலை தருகின்றனர். கேட்கப்போன இளைஞர்களையும் பொலிஸில் நிறுத்தியுள்ளனர். அதற்கான நியாயம் வேண்டும்.

20 கிலோ கொழுந்தைப் பறிக்குமாறு கேட்கின்றனர். அப்படி பறிக்க முடியாது. 13 நாள் வேலை கூட இந்த மாதம் கிடைக்கவில்லை. ஆயிரம் ரூபா கொடுத்ததில் பிரயோசனம் இல்லை.

1,000 ரூபா வழங்கப்பட்டதில் இருந்து 20 கிலோவை எடுத்தால் மாத்திரமே பெயர் என தோட்ட நிர்வாகம் கூறுகின்றது. கிழமையில் 3 நாள் வேலை மாத்திரமே வழங்கப்படுகின்றது என்று இதனைக் கேட்டதால் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுகின்றனர். ஆகவே இந்த முகாமையாளர் தேவையில்லை எனக் கருத்துத் தெரிவித்தனர்.

## உயர்தரப் பெறுபேறுகள் இன்று வெளியாகவுள்ளன

2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று மாலை வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்களத்துக்கு நெருக்கமான வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

அதன்படி உயர்தரப் பரீட்சை முடிவுகள் இன்றிரவுக்கு முன்னர் எப்போது வேண்டுமானாலும் வெளியாகலாம்.

2020 க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளை கடந்த ஏப்ரல் 30 இற்கு முன்னர் வெளியிடத் திட்டமிடப்பட்டது. ஆனால் இசட் மதிப்பெண் கணக்கீடு இரட்டைச் சோதனை செயல்முறை காரணமாக அது ஒரு வாரம் தாமதமானது.

பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளின் கூற்றுப் படி பெறுபேறுகள் வெளியிடும் ஏற்பாடுகள் கிட்டத்தட்ட முடிந்துவிட்டன, அது இன்று வெளியிடப்படும். வெளியிடப்படும் முடிவுகளை கல்வியமைச்சின் வலைத் தளத்தில் பார்வையிடலாம்.

வெளியாகும் முடிவுகளின் அடிப்படையில், 2021 செப்ரெம்பர் மாதத்துக்குள் மாணவர்களை பல்கலைக்கழகங்களில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## சவேந்திர சில்வாவின் மருமகளின் திருமணம் கொழும்பு ஆடம்பர விருந்தகத்தில் நடந்தது?

### ஆனால் அதை அவர் மறுக்கின்றார்



கொவிட் பரவலுக்கு மத்தியில் தனது மருமகளின் திருமணம் கொழும்பில் ஒரு முன்னணி ஆடம்பர விருந்தகத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் செய்தியை இராணுவத்தளபதி சவேந்திர சில்வா மறுத்துள்ளார்.

இது தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பொய்யான பிரசாரத்தின் ஒரு பகுதியாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சவேந்திர சில்வாவின் மருமகளின் திருமணம் என்று கூறி பல இணையத்தளங்களில், புகைப்படங்கள் பகிரப்பட்டிருந்தன. சவேந்திர சில்வா மற்றோர் இராணுவ அதிகாரியை கட்டிப்பிடிப்பதைக் காட்டும் மற்றொரு புகைப்படமும் சமூக ஊடகங்களில் நேற்று திங்கட்கிழமை வெளியாகியிருந்தன.

கொவிட் பரவல் காரணமாக நாட்டில் திருமண வைபவங்கள் இடைநிறுத்தப்படுகின்றன என அதிகாரிகள் அறிவித்திருந்த நிலையிலேயே இந்தப் புகைப்படங்கள் வெளியாகியிருந்தன. எனினும் தனது இரண்டு மருமகள்களும் 16 மற்றும் 19 அகவைக்குட்பட்டவர்கள் என்று இராணுவத்தளபதி சுட்டிக்காட்டியுள்ளார். எனவே இந்த செய்தி பிழையானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இரண்டாவது டோஸ் பெற்றவர்கள் எண்ணிக்கை ஒரு லட்சத்தை கடந்தது

இலங்கையில் கொவிட் - 19 இற்கு எதிராக ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தற்சமயம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸை பெற்றுள்ளனர் என சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் ஒக்ஸ்போர்டு - அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் பெற்ற நபர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 571 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று திங்கள் மாத்திரம் இரண்டாவது டோஸ் 23 ஆயிரத்து 135 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனவரி 29 ஆம் திகதி தேசிய கொவிட் - 19 தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை தொடங்கியது, 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேர் கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதல் டோஸை ஏப்ரல் 15 ஆம் திகதி வரை பெற்றனர்.

கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தும் திட்டம் ஏப்ரல் 26 ஆம் திகதி ஆரம்பமானது.

இலங்கையில் 2 ஆயிரத்து 435 சீன நாட்டினருக்கும் சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.05.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org